## சென்னையில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில்

# 10 இடங்களில் இ-பைக் சோதனை ஓட்டம்

### • புதிய சேவையை தொடங்கியது மாநகராட்சி

■ சென்னை

சென்னை மாநகராட்சியின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் 10 இடங்களில் இ-பைக் சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி சார்பில் போக்குவரத்து நெரிசல் மற்றும் காற்று மாசுவை குறைக்க ஏற்கெனவே 74 இடங்களில் ஸ்மார்ட் சைக்கிள் திட்டம் செயல்படுத்தப்பட்டு அமலில் உள்ளது. ஓராண்டு வாடகை அடிப்படையில் ஸ்மார்ட் சைக்கிளை வாடகைக்கு எடுக்கும் திட்டமும் அமலில் உள்ளது.

அடுத்த கட்டமாக ஸ்மார்ட் பைக்குகளை (இ-பைக்) அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகளை மாநகராட்சி தொடங்கியுள்ளது. அதற்கான சோதனை ஓட்டம் தற்போது தொடங்கியுள்ளது.

மயிலாப்பூர் நாகேஷ்வரராவ் பூங்கா, மெரினா கடற்கரையில் இரு இடங்கள், நந்தனம், அண்ணாநகர் கிழக்கு, திருமங்கலம் ஆகிய இடங்களில் உள்ள மெட்ரோ ரயில் நிலையங்கள், தியாகராய நகர் பாண்டி பஜாரில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதை வளாகத்தில் இரு இடங்கள் உள்ளிட்ட 10 இடங்களில் இ-பைக் சேவை சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு மொத்தம் 32 இ-பைக்குகள், 32 அடுத்த தலைமுறை சைக்கிள்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக ஸ்மார்ட் பைக் திட்ட அதிகாரிகள் கூறியதாவது: இத்திட்டத்தின் கீழ் பயன்பெற http://onelink.to/t74gmp என்ற இணையதள முகவரியில், ஸ்மார்ட் பைக் கைபேசி செயலியை தரவிறக்கம் செய்ய வேண்டும். அதன் வழியாக ஸ்மார்ட் பைக்குகளை இயக்கலாம். அந்த செயலி மூலமாகவே கட்டணத்தையும் செலுத்தலாம்.

ஸ்மார்ட் பைக் என்பது சைக்கிள் போன்று மிதிக்கக்கூடிய, பேட்டரியால் இயங்கக் கூடியது. இதை இயக்க முதல் 10 நிமிடங்களுக்கு ரூ.10, அதற்கு அடுத்த ஒவ்வொரு நிமிடத்துக்கும் ரூ.1 என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஜிஎஸ்டி வரி உண்டு.

அடுத்த தலைமுறை சைக்கிள்களை ஒரு மணி நேரம் இயக்க ரூ.5.50 (ஜிஎஸ்டி தனி), அதற்கு அடுத்த ஒவ்வொரு அரை மணி நேரத்துக்கும் ரூ.9.90 (ஜிஎஸ்டி தனி) கட்டணமாக வசூலிக்கப்படும்.

இத்திட்டத்தை முதல்வர் பழனிசாமி விரைவில் தொடங்கி வைக்க உள்ளார். பொதுமக்களிடம் இருக்கும் வரவேற்பு அடிப்படையில், இத்திட்டம் மேலும் விரிவாக்கப்படும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.